இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 63 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 26 – சனிக்கிழமை 12 அக்டோபர் 2024 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 63 : Thiruvalluvar Year - 2055 - Purataasi 26 - Saturday 12 October 2024 - Madurai 16 Pages ₹ 5.00


## கலைஞரின் கொள்கைத் தூதுவர் - முதல்வர் ஸ்டாலினுக்கு இலட்சியத் தாசன், ஆலோசகர்

# முரசொலி செல்வம் இறுதி ஊர்வலம்!

## அனைத்து அரசியல் கட்சித் தோழர்களும் கலந்துகொண்டு கண்ணீர் அஞ்சலி !

**சென்னை, அக்.12-**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மருமகனும் - அரசியல் மேதை முரசொலி மாறன் அவர்களின் உடன்பிறந்த சகோதரரும், தலைசிறந்த எழுத்தாளரும், தன்னிகரில்லாத மனித நேயருமான முரசொலி செல்வம் அவர்கள், நேற்று முன்தினம் (10.10.2024) காலை, பெங்களூருவில் மாரடைப்பு காரணமாக இயற்கை எய்தினார். அவருக்கு வயது 84.**

**அன்னாரின் உடல் பெங்களூருவில் இருந்து கொண்டு வரப்பட்டு, சென்னை - கோபாலபுரத்தில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டது.**

**முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தினார். அமைச்சர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பல்வேறு துறைகளை சார்ந்தோர், கலையுலகினர், கழக முன்னோடிகள், மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பல்லாயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்தினார்கள். நேற்று மாலை நடைபெற்ற இறுதி ஊர்வலத்திலும் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.**



முரசொலி செல்வம் அவர்களின் உடலைக் கட்டியணைத்துக் கதறி அழுத முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

பெங்களூருவில் உள்ள தமது இல்லத்தில், 9.10.2024 அன்று இரவு, 'முரசொலி' கட்டுரை தீட்டுவதற்கான குறிப்புகளைத் தயார் செய்து வைத்துவிட்டு, உறங்கச் சென்றவர் அதிகாலையில் படுக்கையிலேயே திடீரென மாரடைப்பு ஏற்பட்டு முரசொலி செல்வம் அவர்கள் மறைவெய்தினார்.

முரசொலி செல்வம் அவர்களின் திருவுடல் பெங்களூருவிலிருந்து சென்னைக்கு ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு வரப்பட்டு, கோபாலபுரம் கலைஞர் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

“தலைவர் கலைஞர் இல்லை என்ற குறையை எனக்கு இன்றைக்கும் போக்கிக் கொண்டிருப்பவர்!” எனத் தம்மால் நெகிழ்ந்து கூறப்படும் பெருமைக்குரியவரான முரசொலி செல்வம் அவர்களை உயிரற்ற நிலையில் காணவொண்ணாது முரசொலி செல்வம் அவர்களின் உடலைக் கட்டியணைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கதறி அழுதார். அந்தக் காட்சி அனைவர் கண்களையும் குளமாக்கியது.

அமைச்சர்களும், கழக முன்னணியினரும், நிர்வாகிகளும், பல்துறைகளின் முன்னணிப் பெருமக்களும், கழகத்தினரும் ஆயிரக்கணக்கில் திரண்டுவந்து கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

நேற்று (11.10.2024 - வெள்ளிக்கிழமை) மாலை 4.30 மணியளவில், கோபாலபுரம் இல்லத்திலிருந்து முரசொலி செல்வம் அவர்களின் திருவுடல் எடுத்துச் செல்லப்பட்டு, பெசன்ட் நகர் மின் மயானத்தில் எரியூட்டப்பட்டது.

### மலரஞ்சலி!

மறைந்த முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், திரையுலகினர், அரசு உயர் அதிகாரிகள் மலரஞ்சலி செலுத்தினர்.

நேற்று முன்தினம் அஞ்சலி செலுத்தியவர்கள் விவரம் வருமாறு :-

கழகப் பொதுச் செயலாளர் - நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, இளைஞரணிச் செயலாளரும் - துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தலைமைக் கழக நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள்.

### அரசியல் கட்சி பிரமுகர்கள் :

முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான வைகோ, தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான வேல்முருகன், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுச் செயலாளர் திருமதி. பிரேமலதா மற்றும் அவரது சகோதரரும் துணைச் செயலாளருமான சுதீஷ், ம.தி.மு.க. தலைமைக் கழக செயலாளர் துரை வைகோ எம்.பி., கொங்கு மக்கள் தேசியக் கட்சியின் சார்பில் ஈ.ஆர்.ஈஸ்வரன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன், புதிய நீதிக் கட்சியின் தலைவர் ஏ.சி.சண்முகம், கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், ஆம் ஆத்மி கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் வசீகரன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் கி.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு )மற்றும் அவரது குடும்பத்தினர்.

### திரையுலக பிரமுகர்கள் :

கவிப்பேரரசு வைரமுத்து, நடிகர்கள் சத்யராஜ், சரத்குமார் மற்றும் அவரது மனைவி திருமதி. ராதிகா, வாகை சந்திரசேகர், பிரசாந்த், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் குடும்பத்தினர், பாடகர் சீர்காழி சிவசிதம்பரம், நடிகர் விஜய் அவர்களின் மனைவி திருமதி சங்கீதா, நடிகர் விக்ரம் அவர்களின் மனைவி திருமதி ஷைலஜா, நடிகை திருமதி ஸ்ரீபிரியா.

### முக்கியப் பிரமுகர்கள் :

வி.ஜி.பி. சந்தோசம், வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தின் வேந்தர் ஜி.விஸ்வநாதன், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தின் தலைவர் பொன்குமார், கவிஞர் மனுஷ்யபுத்திரன், முகசீரமைப்பு மற்றும் பல் மருத்துவர் பாலாஜி, பேராயர் வின்சென்ட் சின்னதுரை.

### அரசு மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள்

தமிழ்நாடு, அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் எஸ்.கே.பிரபாகர் ஐ.ஏ.எஸ்., அரசு தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், முதலமைச்சரின் செயலாளர்கள், அரசு துறைச் செயலாளர்கள், சென்னைப் பெருநகர காவல் ஆணையர் அருண், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள்.

### பேராசிரியர் குடும்பத்தினர்

இனமானப் பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச் செல்வன், அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட அவர்களின் குடும்பத்தினர் முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு மலர்மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

### நேற்று (11.10.2024) நேரில் அஞ்சலி செலுத்தியோர் விவரங்கள்:

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன், தமிழ்நாடு காங்கிரஸ் சட்ட மன்றத் தலைவர் செ.ராஜேஷ்குமார், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர்கள் கே.வி.தங்கபாலு, சு.திருநாவுக்கரசர், முன்னாள் ஆளுநர் திருமதி.தமிழிசை சௌந்தரராஜன், முன்னாள் மத்திய அமைச்சர் திருமதி.சுப்புலட்சுமி ஜெகதீசன், மனிதநேய ஜனநாயக கட்சியின் மாநிலத் தலைவர் தமிமுன் அன்சாரி, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜி.க.வாசன், முக்குலத்தோர் புலிப்படைக் கட்சித் தலைவர் கருணாஸ், இந்திய ஜனநாயக கட்சியின் தலைவர் ரவி பச்சமுத்து, தமிழ்நாடு காங்கிரஸ் ஊடகத் துறை தலைவர் எ.கோபண்ணா, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொய்தீன், நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார், முஸ்லீம் லீக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் எம்.கிருஷ்ணசாமி, தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத்தின் முன்னாள் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், தமிழ்நாடு பனை மரத் தொழிலாளர்கள் நலவாரியத்தின் தலைவர் எர்ணாவூர் ஏ.நாராயணன், சட்டமன்ற உறுப்பினர் ஈ.வி.கே. எஸ். இளங்கோவன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற கட்சித் தலைவர் சிந்தனைச் செல்வன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன், துணைப் பொதுச் செயலாளர் மதிவதினி, திராவிடர் கழக வழக்கறிஞர் அருள்மொழி.

### திரையுலக பிரமுகர்கள்

திரைப்பட இயக்குனர் பி.வாசு, திரைப்பட நடிகர் பாக்கியராஜ், அவரது மனைவி திருமதி பூர்ணிமா பாக்கிராஜ், திரைப்பட நடிகர்கள் பார்த்திபன், எஸ்.வி.சேகர், திரைப்பட இயக்குனரும், நடிகருமான எஸ்.ஏ.சந்திரசேகர், திரைப்பட நடிகர் விஜயகுமார், அவரது மகன் அருண் விஜய் மற்றும் குடும்பத்தினர், திரைப்பட நடிகர் ராம்குமார், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் தலைவரும், திரைப்பட நடிகருமான வி.ராஜேஷ், திரைப்பட நடிகர் தியாகராஜன், திரைப்பட நடிகை திருமதி நளினி.

### முக்கிய பிரமுகர்கள்

இந்து குழுமத்தின் இயக்குநர் என். ரவி, டாக்டர்.நல்லி குப்புசாமி, அகில இந்திய இரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவரும், தென்னக இரயில்வே மஸ்தூர் யூனியன் பொதுச் செயலாளருமான டாக்டர் ந.கண்ணையா, நக்கீரன் இதழ் ஆசிரியர் நக்கீரன் கோபால், ஸ்ரீ இராமச்சந்திரா கல்வி நிறுவன வேந்தர் வி.ஆர்.வெங்கடாசலம், ரேலா மருத்துவமனை இயக்குநர் டாக்டர் முகமது ரேலா, மாற்றுத்திறனாளிகள் நலச் சங்கத் தலைவர் தங்கம், பேராயர் ஹென்றி, அருள் தந்தை சர்மா.

ஜாக்டோஜியோ சங்க நிருவாகிகள், ஆசிரியர்கள் சங்க கூட்டமைப்பு நிருவாகிகள், தலைமைச் செயலக சங்க நிருவாகிகள், உள்ளிட்ட ஏராளமானோர் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.